II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No.39 of 2018**

Deposition of witness for the Defendant /DW 2
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 22.07.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | S.Ravi | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பி.சா.2 ஆஜர்.</u>

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

எனது தாயார் நான் சாட்சியம் அளிப்பதற்கு எழுத்து மூலமான அத்தாட்சி எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். என் தாயார் உடல் நலம் இன்றி உள்ளார் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணம் என்னிடத்தில் உள்ளது. நான் என்தாயாரோடு பெங்களூரில் வசிக்கிறேன். என் தாயாரின் திருமணத்தில் இருந்து நாங்கள் பெங்களூரில் தான் வசிக்கிறோம். என் பெற்றோருக்கு 1966ம் ஆண்டு திருமணம் ஆனது. இந்த வழக்கு சொத்து கிரையம் பெறும் போது நாங்கள் சென்னைக்கு வந்திருந்தோம். வழக்கு சொத்து கிரையம் பெற்றது பற்றி எனக்கு நேரடியாக தெரியும். நான் 1968ல் பிறந்தேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 2025ல் எனக்கு 55 வயது என்று

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 1968 ல் பிறந்தேன் என்பது தான் சரி. 1974 ல் கிரையம் பெறும் போது கிரைய நடவடிக்கையில் நான் நேரடியாக ஈடுபடவில்லை என்றால் சரிதான். என் தாயார் சொல்லி தெரியும். வாதி எனது தாயாரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சொத்து பிரச்சனையால் அவர் இருவருக்கும் 10 வருடங்களாக பேச்சுவார்த்தை எதுவும் இல்லை. 2011 ல் குடுப்ப சொத்துகளை பாகம் பிரிக்கும் போது அந்த நடவடிக்கைகளில் நானும் உடன் இருந்தேன். குடும்ப சொத்துகளை பொருத்து 1996 லேயே ஒரு பாகப்பிரிவினை சகோதரர்களுக்குள் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1996 ல் இருந்தே வாதியின் அவரின் வாடகைதாரர்கள் தான் அனுபவத்தில் இருந்து வந்தனர் என்றால் சரியல்ல. 1996 ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் வழக்கு சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் முதலில் ஒருதளம் போட்ட கட்டிடமும், சிமெண்ட் ஓடு (ஆஸ்பெஸ்டாஸ்) போட்ட ஷெட்டும் இருந்தது என்றால் சரிதான். அந்த ஷெட்டில் நசீர் என்பவர் பட்டன் கம்பெனி நடத்தி வந்தார் என்றால் தவறாகும். வழக்கு சொத்தை 05.02.2018 அன்று என் தாயார் மாலதி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையத்தை எவ்வளவு நாட்களுக்கு முன்பாக முடிவு செய்தோம் என்றால் கிரையத்திற்கு 5 நாட்கள் முன்பாக முடிவு செய்தோம். வழக்கு சொத்தை ஒட்டியவாறு கிழபுறத்தில் 2 ம் பிரதிவாதிக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் சரிதான். கிரையம் செய்வதற்கு முன்பு நாங்கள் முன் பணம் எதுவும் வாங்கவில்லை. எங்கள் குடும்பத்திற்குள் இந்த வழக்கிற்கு முன்பாக அ.வா.எண்.87/2013 என்ற வழக்கு இதே நீதிமன்றத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த என் தாயார் தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். இந்த வாதி என் தாயாருக்கு எதிராக

அ.வ.எண்.25/2018 என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என் தாயார் கிரையம் கொடுத்த பிறகு அந்த வழக்கை தாக்கல் செய்தார்.

(இந்நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்க விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)